©
GOVERNMENT OF TAMIL NADU
2014

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 1.60 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

No. 3] CHENNAI, WEDNESDAY, JANUARY 22, 2014
Thai 9, Vijaya, Thiruvalluvar Aandu–2045

## Part III—Section 1(a)

**General Statutory Rules, Notifications, Orders, Regulations, etc., issued by Secretariat Departments.**

**NOTIFICATIONS BY GOVERNMENT**

**CONTENTS**

*Pages.*

LABOUR AND EMPLOYMENT DEPARTMENT

Draft Amendment to the Tamil Nadu Factories Rules. .. .. .. 6-8

## NOTIFICATIONS BY GOVERNMENT

LABOUR AND EMPLOYMENT DEPARTMENT.

**Draft Amendment to the Tamil Nadu Factories Rules.**

*[G.O.Ms. No. 303, Labour and Employment (M2), 20th December 2013, மார்கழி 5, விஜய, திருவள்ளுவர் ஆண்டு–2044.]*

No. SRO A-5/2014.— The following draft of an amendment to the Tamil Nadu Factories Rules, 1950, Which it is proposed to make in exercise of the powers conferred by Section 112 of the Factories Act, 1948 (Central Act LXIII of 1948) is hereby published for information of all persons likely to be affected thereby as required by section 115 of the said Act.

2. Notice is hereby given that the draft amendment will be taken into consideration after the expiry of forty five days from the date of publication of this Notification in the *Tamil Nadu Government Gazette* and that any objections or suggestions, which may be received from any person with respect thereto before the aforesaid period of expiry, will be considered by the Government of Tamil Nadu. Objection and suggestions, if any, should be addressed in duplicate to the Principal Secretary to Government, Labour and Employment Department, Fort St. George, Chennai-600 009, thourgh the Director of Industrial Safety and Health, New No. 35, Thiru Vi.Ka. High Road, Chennai-600 014.

DRAFT AMENDMENT

In the said Rules, after rules 84A, the following rule shall be inserted, namely:—

*"84 B. Guidelines for the employment of women in night shifts.*—(1) It shall be the duty of the occupier of a factory, to take all steps to prevent the commission of the acts of sexual harassment in the factory;

(2) The occupier of a factory shall maintain a complaint mechanism in the factory itself and to dispose of the complaints in time bound with strict confidentiality, by constituting a complaint committee which shall consist of such members, headed by a woman familiar with the issues of sexual harassment and not less than half of its members should be women besides a non-governmental organisation's representation;

(3) The women workers shall be allowed to raise the issue of sexual harassment in the workers' meeting;

(4) The occupier of a factory take all necessary steps to assist the women workers affected by sexual harassment;

(5) The occupier of a factory shall provide proper lighting in and around the factory;

(6) The occupier of a factory shall ensure that women workers employed in night shift shall not be less than ten as well as not less than two third of the total strength of workers and one third of the Supervisors/Shift Incharge/Foremen shall be women;

(7) The occupier of a factory shall provide sufficient women security at the entry and exit points and sufficient work sheds for the women workers employed in night shift;

(8) The occupier of a factory shall provide separate canteen facility and separate safe transportation from the factory premises to the nearest point of their residence to the women workers in night shift;

(9) The occupier of a factory shall provide necessary medical facilities and also make available at any time of urgency in case of injury or incidental acts of harassment, by providing necessary telephone connections;

(10) The occupier of a factory shall ensure that wherever the factory provides boarding and lodging for the women workers, the same shall be kept exclusively for the women under the control of women Wardens or Supervisors;

(11) The occupier of a factory shall ensure that there shall not be less than twelve consecutive hours of rest between the last shift and the night shift whenever a women worker is changed from day shift to night shift and from night shift to day shift;

(12) The occupier of a factory shall appoint not less than two women workers per night shift who shall go round and work as Special Welfare Assistants;

(13) The occupier of a factory shall send a fortnightly report to the Inspector about the details of employees engaged during night shifts and also to send express report whenever there is any untoward incident to Inspector and Police Station concerned as well;

(14) The occupier of a factory shall exhibit these guidelines in a prominent place so that the women workers can be aware of their rights".

## அறிவிக்கை

*[G.O. Ms. No. 303, Labour and Employment (M2), 20th December 2013, மார்கழி 5, விஜய, திருவள்ளுவர் ஆண்டு–2044.]*

**1948–**ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **63/1948**) **112–**ம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு **1950–**ம் ஆண்டு தொழிற்சாலைகள் விதிகளில் செய்யக் கருதியுள்ள பின்வரும் வரைவுத் திருத்தங்கள், மேற்சொன்ன சட்டத்தின் **115–**ம் பிரிவில் கோரியுள்ளவாறு அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

**2.** வரைவு திருத்தங்கள், இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து **45** நாட்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்கு பின்னர், பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும், மேற்சொன்ன காலஅளவு முடிவடைவதற்கு முன்னர், அது தொடர்பாக, யாதொரு நபரிடமிருந்து வரப்பெறுகிற யாதொரு மறுப்புரை அல்லது கருத்துரை, தமிழ்நாடு அரசால் பரிசீலிக்கப்படும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனும் இருப்பின்அவற்றை தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம், புதிய எண் **35**, திரு.வி.க. ஹைரோடு, இராயப்பேட்டை, சென்னை**–600 014–**ல் உள்ள தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் மூலம் அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை**–600 009** என்ற முகவரிக்கு இருபடிகளில் அனுப்பி வைக்க வேண்டும்.

## வரைவு திருத்தம்

மேற்சொன்ன விதிகளில், **84–A–**ஆம் விதிக்குப் பின்னர், கீழ்க்கண்ட விதி சேர்க்கப்படவேண்டும். அதாவது விதி **84**பி– இரவுநேர முறைமாற்றுப் பணியில் பெண்களை பணிக்கமர்த்தும் போது பின்பற்றத்தக்க வழிகாட்டிக் குறிப்புகள்:–

**1.** எந்த ஒரு தொழிற்சாலையிலும் பாலியல் பலாத்காரச் செயல் ஏற்படுவதை தடுத்து நிறுத்துவதற்கான அனைத்து விதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்வது அத்தொழிற்சாலை உரிமையாளரின் கடமையாகும்.

**2.** புகார்களை தெரிவிக்க ஏதுவாக நன்கறிந்த பெண் தலைமையில், மொத்தம் உள்ள உறுப்பினர்களில் பாதிக்கு குறையாமல் பெண்களைக் கொண்டும், அரசு சாரா நிறுவன பிரதிநிதி ஒருவரையும் உறுப்பினராகக் கொண்டு தொழிற்சாலை உரிமையாளரால் புகார் குழு ஒன்று தொழிற்சாலையிலேயே உருவாக்கப்பட வேண்டும். அதன் மூலம் பெறப்படும் புகார்களை மிகக் கமுக்கமான முறையில் குறிப்பிட்ட காலத்திற்குள் தீர்வு செய்யப்பட வேண்டும்.

**3.** தொழிலாளர்களின் கூட்டத்தில் பாலியல் தொல்லைகள் குறித்து பெண் தொழிலாளர்கள் எடுத்துரைக்க அனுமதிக்கப்பட வேண்டும்.

**4.** பாலியல் தொல்லையினால் பாதிக்கப்பட்ட பெண் தொழிலாளர்களுக்கு உதவி புரியும் வகையில், அனைத்து உரிய நடவடிக்கைகளையும் தொழிற்சாலையின் உரிமையாளர் மேற்கொள்ள வேண்டும்.

**5.** தொழிற்சாலையின் உட்பகுதிகளிலும் அதனை சுற்றியுள்ள இடங்களிலும் தகுந்த வெளிச்சம் உள்ளவாறு விளக்குகளை உரிமையாளரால் அமைக்கப்பட வேண்டும்.

**6.** இரவுநேர முறைமாற்றுப் பணியில் பெண் தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படும் தருணங்களில், அவர்களின் எண்ணிக்கை **10–**க்கு குறைவாக இல்லாதவாறும், மொத்த பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்குக்கு குறையாமலும், மேற்பார்வையாளர்கள்/மாற்றுமுறைப் பணி (ஷிப்ட்) பொறுப்பு/முதலாள் (தொழிற்பிரிவு) இவர்களில் மூன்றில் ஒரு பங்கு பெண்கள் இருப்பதை உரிமையாளர் உறுதி செய்ய வேண்டும்.

**7.** உரிமையாளரால் தொழிற்சாலையின் நுழைவாயில் மற்றும் வெளி வாயில் பகுதிகளில் கணிசமான அளவு பெண் பாதுகாவலர்களுக்கு ஏற்பாடு செய்வதுடன் மற்றும் இரவுநேர மாற்றுப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பெண் தொழிலாளர்களுக்கு போதிய அளவு தொழிற் கொட்டகைகளுக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

**8.** தொழிற்சாலையில் இரவு நேர முறை மாற்றுப் பணியில் ஈடுபடுத்தப்படும் பெண் தொழிலாளர்களுக்காக தனியாக உணவக வசதிகளை அளிப்பதோடு, இத்தகைய பெண் தொழிலாளர்கள் தொழிற்சாலை வளாகத்திலிருந்து அவர்களுடைய குடியிருப்பிடத்திற்கு அருகில் உள்ள ஒரு பொது இடம் வரை பாதுகாப்பாக செல்வதற்கு உரிமையாளர் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தி தர வேண்டும்.

**9.** தொழிற்சாலையின் உரிமையாளர், தேவையான மருத்துவ வசதிகளை ஏற்படுத்தி தர வேண்டும். மேலும் காயம் ஏற்படும் தருணங்களிலும் அல்லது பாலியல் தொல்லைகளினால் பிரச்சினைகள் ஏற்படும் அவசர காலங்களிலும் தொடர்பு கொள்ள தகுந்த தொலைபேசி இணைப்புகள் எற்படுத்திட வேண்டும்.

**10.** எந்த ஒரு தொழிற்சாலையிலும் பெண் தொழிலாளர்களுக்கு உணவகமும், உறைவிடமும் அமைத்து தரப்படும் பட்சத்தில், அது பெண்களுக்கென தனியாக இருக்கும் வகையில், பெண் காப்பாளர்கள் அல்லது பெண் மேற்பார்வையாளர்கள் பொறுப்பில் அமைத்து தருவதை உரிமையாளர் உறுதி செய்ய வேண்டும்.

**11.** ஒரு பெண் தொழிலாளி பகல் நேர முறைமாற்றுப் பணியிலிருந்து இரவு நேர முறைமாற்றுப் பணிக்கும் மற்றும் இரவு நேர முறைமாற்றுப் பணியிலிருந்து பகல் நேர முறைமாற்றுப் பணிக்கும் மாற்றப்படும் தருணங்களில், குறைந்த பட்சம் தொடர்ந்து **12** மணி நேரம் ஓய்வு (அதாவது, கடைசி முறைமாற்றுப் பணிக்கும், இரவு நேர முறைமாற்றுப் பணிக்கும்) கிடைக்கப்பெறுவதை உரிமையாளர் உறுதி செய்ய வேண்டும்.

**12.** எந்த ஒரு தொழிற்சாலையிலும், இரவு நேர முறைமாற்றுப் பணி நேரங்களில், இரண்டு பெண் தொழிலாளர்களுக்கு குறையாத அளவில் பெண் தொழிலாளர்கள் தொழிற்சாலை வளாகத்தினுள் சுற்றிவரவும், சிறப்பு நல உதவியாளர்களாக செயல்படவும் உரிமையாளர் அவர்களை பணியமர்த்தப்பட வேண்டும்.

**13.** ஒரு தொழிற்சாலையில் பெண் தொழிலாளர்கள் இரவு நேர முறைமாற்றுப் பணியில் ஈடுபடுத்தப்படுவார்களேயானால், அவர்களின் விவரங்களை **15** தினங்களுக்கு ஒரு முறை சம்பந்தப்பட்ட ஆய்வாளர்களுக்கு உரிமையாளர் அனுப்பி வைக்க வேண்டும். மேலும் எதிர்பாராத நிகழ்வுகள் ஏதேனும் ஏற்படுமேயானால், அத்தருணங்களில் சம்பந்தப்பட்ட ஆய்வாளருக்கும், காவல் நிலையத்திற்கும் விரைவு அறிக்கையை உரிமையாளர் அனுப்பி வைக்க வேண்டும்.

**14.** பின்பற்றத்தக்க இந்த வழிகாட்டிக் குறிப்புகள் குறித்து பெண் தொழிலாளர்கள் அவர்களின் உரிமைகளை தெரிந்துகொள்ளும் வகையில் பிரதான இடத்தில் உரிமையாளர் காட்டி வைக்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU